# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

இந்திய
கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கு

# ஓர் நற்செய்தி

கலந்துகொண்டு ! பயன்பெறுங்கள் !!

சென்னை
சாய்நகர் கிறிஸ்துவின் சபை நடத்தும்
13-வது ஊழியர்

# கருத்தரங்கு

காலம்: 12—2—95 மாலை 4-00 மணி முதல்
14—2—95 மாலை 4-00 மணி முடிய

இடம்: சென்ட்ரல் ஆடிடோரியம் 29A, குமரன் நகர்,
சென்னை-600 082.

★ ★ ★ ★ ★

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**Dr. PETER SOLOMON,**
Lectures Co - ordinator,
13, Sainagar, MADRAS-82.

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 3 ஜனவரி 1995 கனி 6


## புறப்படுங்கள், புறப்படுங்கள்
## Depart ye. Depart ye

இச்செய்தியை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே, இப்புத்தாண்டில் ஏசா52:11லிருந்து ஐந்து காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

புறப்படுங்கள், புறப்படுங்கள் எங்கே,எதற்கு என கேட்கிறீர்களா? நமதாண்டவர் தம்முடைய சீஷர்களை நோக்கி நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து... என்று மத் 28:19ல் வாசிகின்றோம். இக்கட்டளையை நிறைவேற்ற புறப்படுங்கள் அவர்களோ உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அநேக இடங்களில் கிறிஸ்துவின் சபையை உருவாக்கி இருக்கிறார்கள். நாமோ அண்டை வீடுகளுக்கும், அண்டை கிராமங்களுக்கும் புறப்பட்டு போய் சுவிசேஷத்தை அறிவிக்காதவர்களாய் இருக்கிறோம். புறப்படுங்கள் என்று ஒரு முறை சொல்லி விட்டால் மட்டும் போதாது. மற்றொரு முறையும் நம் மக்களுக்குச் சொலல வேண்டியிருக்கிறது. தம்மை பின்தொடர்ந்து வந்த மக்களைப் பார்த்து மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று ஆண்டவர் அழுத்தமாகச் சொல்லுவதைப் போல, இங்கும் சொல்லப்படுகிறது.

அவ்விடம்விட்டுப் போங்கள் என்றால் தகப்பனை எப்படி விட்டுப்போவது என் குடும்பத்திலிருக்கும் சொத்தையெல்லாம் யார் பாதுகாப்பது என்றெல்லாம் சாக்குப் போக்குச் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்திற்குப்போ என்றார். ஆதி 12:1-4ல் அப்படியே கீழ்படிந்து அவ்விடம்விட்டுப் போனான். இதை வாசிக்கும் என தருமை சகோதரனே, சகோதரியே நம்மை பார்த்தும் ஆண்டவர் சொல்லுகிற காரியம், இதுவே தகப்பனையாவது, தாயையாவது என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்கு பாத்திரனல்ல. மகனையாவது, மகளையாவது என்னிலும் அதிகமாய்

நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல. தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரனல்ல மத் 10:37-38. தேவனுடைய இராஜ்ஜியத்தினிமித்தம் இவர்களை விட்டுச் செல்ல தயங்கக் கூடாது. நாம் நினைப்பதற்கும், வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாய் கர்த்தர் கொடுக்க அறிந்திருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேலரைப் பார்த்து எகிப்தைவிட்டு போங்கள் என்றார் அப்படியே கீழ்ப்படிந்து அவ்விடம் விட்டு வனாந்திரப் பயணத்தைத் தொடங்கினார்கள். இந்த 40வருட பயணத்தில் அவர்களது வஸ்திரம் பழையதாய் போகவுமில்லை, கால் வீங்கவுமில்லை. பாதரட்சைகள் பழையதாய் போகவுமில்லை. இன்றைய நாட்களில் கால்வீங்கி, இவைகளெல்லா பழையதாய் போய், பாதையாத்திரை செல்லும் ஏாலி பக்தர்களை பார்க்கிறோம். நம் தேவன் எப்படிப்பட்டவர் என்று உபா 8:4, 29:5 ல் வாசிக்கின்றோம். கர்த்தரே அவர்களைப் புறப்பண்ணினார், அவர்களது தேவைகள் யாவையும் சந்தித்தார் 10 விதமான வாதைகளை பார்வோனிடத்தில் அனுப்பி இஸ்ரவேலரை மீட்டெடுத்தார். சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரை வழியாகக் கடப்பது போல கடக்கப் பண்ணினார். எத்துனை ஆச்சரியம் சிந்தித்துப் பாருங்கள்.

அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்றால் அதை தான் முதலில் செய்வது காரணம் நாம் ஏவாளின் பிள்ளைகளாயிருக்கிறோமே பிரியமானவர்களே! அசுத்தமானதைப் பார்க்கும் போது பரலோக இராஜ்ஜியத்தை நினைத்துப் பாருங்கள். அப்போது அசுத்தம் உங்களை மேற்கொள்ளாது. அசுத்தம் நிறைந்த உலகத்திலிருக்கிறோம் என்று நினைக்கலாம்.

உப்பு நிறைந்த கடல் நீரில் மீன் வாழ்கிறது. ஆனால் உப்பு அந்த மீனுக்குள் செல்லுவதில்லை அதைப்போல அசுத்தம் நிறைந்த உலகத்தில் வாழ்ந்தாலும் பாவமாகிய அசுத்தம் நமக்குள் செல்லக் கூடாது. நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் II கொரி 6:17 விக்கிரகங்களை அருவருத்து, அதை நாம் தொடாது நமஸ்கரிக்காது இருக்க வேண்டும். நீங்கள், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே பண்ணின உடன் படிக்கையை மறந்து உங்கள் தேவனாகிய கர்த்தர் வேண்டாமென்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காதபடி எச்சரிக்கையாயிருங்கள் உபா 4:23. இப்படிப்பட்ட காரியத்தை எச்சரித்தும், ஒரு கன்று குட்டியை உண்டாக்கி இதுதான் நம் தேவன் என்று சொல்லி அசுத்தமானதை நடப்பித்தார்கள். இன்றும் அநேக வீடு

களில் இடிப்பட்டகாரியத்தைச் செய்கிறார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற பலர் தேவனுக்கு ஒப்பா விக்கிரகங்களை உருவாக்கி வீடுகளிலும், ஆலயங்களிலும் தொழுது கொள்கிறார்கள் ஒரு விக்கிரகத்தை உருவாக்குவதும், அதைத் தொழுது கொள்ளு-வதும் தேவனுக்கு முன்பாக மாபெரும் தவறே அது அசுத்தம் அது நரகல். அதற்கு விலகி ஓடுங்கள் என்று வேதம் 1 கொரி 10:14ல் எச்சரிக்கிறது. விலகி ஓடுங்கள் என்று சொல்லும் போது அந்த அசுத்தத்தைத் தொட முற்படலாமா?

கர்த்தருடைய பாத்திரங்களை சுமக்கிறவர்களே சத்தியத்தை போதிக்கிற நீங்கள் சத்தியத்தை விட்டு விலகாதிருங்கள். பாலியத்-துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்-குமென்று அறிந்து அவைகளுக்கு விலகியிரு. கர்த்தருடைய பாத்தி-ரங்களை சுமக்கிறவர்களே, இவைகளை விட்டு, தன்னைச் சுத்தி கரித்து கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டது மான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான் என்றுII தீமோ2:21-23ல் வாசிக்கிறோம். கர்த்தர் அனனியாவைப் பார்த்து புறஜாதிகளுக்கும் இராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான் என்று பவுலைக் குறித்துச் சொல்லுகிறார். இந்த பவுலைப் போல நாமும் தேவன் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருந்து கர்த்தருடைய பாத்திரங்களை சுமப்போம்.

அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களை சுத்திகரியுங்கள் பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றும் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்றும் சொல்லுவதை லூக் 5:24.32 ஆகிய வசனங்களில் வாசிக்கின்றோம். நீங்கள் உங்கள் பழைய பாவ வாழ்க்கையை விட்டு உங்களை இரட்சிக்க வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் சென்று சுத்திகரித்துக் கொள்ளுங்கள் அப்போது கிறிஸ்துவின் வசனத்தை பிடித்துக்கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிப்பீர்கள் இரத்தத்தையும், இறந்து போனதையும், பீறுண்டதையும் புசிக்கிறவன் தீட்டுப் பட்டவன். அவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்காமலும், ஸ்நானம் பண்ணாமலுமிருந்தால் தன் அக்கிரமத்தை சுமப்பான் லேவி 17:14-16 அதைப்போல இப்பொழுது பாவத்திலே ஜீவிக்கிற மனிதன்

தீட்டுப்பட்டவன் போல் இருப்பான். இயேசு நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றவனோ இரட்சிக்கப்படுவான், பெறாதவன் அக்கிரமத்தை தானே சுமந்து கொண்டு திரிவான். ஆகையால் அக்கிரமத்தின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களை சுத்திகரியுங்கள்.

★ சபைச்செய்திகள்:

சகோ. மைக்கேல் செல்லத்துரை, தாடிக்கொம்பு சபை ஊழியருக்கும் சகோதரி. நிர்மலா ஜுலியட் அவர்களுக்கும் பரிசுத்த விவாகம் 12.12.94ல் திருச்சியில் இனிதே நடைபெற்றது.

★ டிசம்பர் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. P. தயாளன் | வத்தலக்குண்டு |
| 2. A. ஸ்டெல்லா | ,, |
| 3. M. ராபர்ட் | கோவை |

★ சிறுவர் வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. S. கோபி | வதிலை | 9. P. ஜாஸ்மீன் | வதிலை |
| 2. R. மணிகண்டன் | ,, | 10. V. அனிதா | சொ.புரம் |
| 3. V. ஈஸ்வரி | ,, | 11. K. உத்தமன் | க.பட்டி |
| 4. M. மகாலட்சுமி | ,, | 12. S. செல்லமணி | ,, |
| 5. S. மீனாட்சி | ,, | 13. S. மகாராஜா | ,, |
| 6. V. சாந்தி | ,, | 14. S. மாசிலாமணி | ,, |
| 7. S. சாந்தகுமாரி | ,, | 15. M. வேல்மணி | ,, |
| 8. V. முனியம்மாள் | ,, | | |

★ டிசம்பர் மாத இதழின் விடைகள்

| | |
|---|---|
| 1. 100 வயதில் ஆதி 11:10 | 6. போடும் |
| 2. பொத்தலான பையில் ஆகா 1:6 | 7. சரி |
| 3. அழிவைக் அப் 13:37 | 8. தன் பிராணனுக்கே |
| 4. முன்குறித்திருக்கிறார் எபே 1:6 | 9. ரெம்பான் |
| 5, தேவனிடத்தில் எபி 7:19 | 10. சங் 136 |

★ சிறுவவர் வேத அறிவுப் போட்டி விடைகள்

| | |
|---|---|
| 1. கொடாமல் | II தீமோ 1:7 |
| 2. சட்டத்தின் | II ,, 2:5 |
| 3. பெலனை | ,, 3:5 |
| 4. விசுவாசத்தை | ,, 4:7 |
| 5. எல்லாவற்றிலும் | ,, 4:5 |

## ★ இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் இம்மாதம் 25ம் தேதிக்குள் ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புக.

1. வயதில் ஆரோன் மூத்தவனா அல்லது மோசே மூத்தவனா?
2. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேஎதுஇருக்கும்?
3. பத்துக் கற்பனைகளாகிய உடன் படிக்கையை அவர் எத்தனை கற்பலகைகளில் எழுதினார்?
4. நான் இன்னும் மனுளரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் யாருடைய ஊழியக்காரனல்லவே?
5. தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப்பின் பற்றாதவன் எனக்கு என்ன அல்ல?
6. எத்தனை விதமான வாதைகளை பார்வோனிடத்தில் அனுப்பி இஸ்ரவேலரை மீட்டு எடுத்தார்?
7. எதற்கு முன்பாக முத்துக்களை போடக்கூடாது என்கிறார்?
8. பரிசேயர் சதுசேயர் என்பவர்களை ஆண்டவர் எந்த மாவுக்கு ஒப்பிடுகிறார்?
9. கொர்நேலியு யார் பாதத்தில் விழுந்தாள்?
10. கோயில் பூஜாசாரி யாருக்கு பலியிட மனதாயிருந்தான்.

## ★ சிறுவர் வேத அறிவுப் போட்டி
(தீத்து & பிலேமோன் புத்தகத்திலிருந்து)

1. கர்த்தருக்குள் என்..................இளைப்பாறப்பண்ணும்.
2. அந்தப்..................நம்மேல் சம்பூரணமாய் பொழிந்தருளினார்
3. கிரியைகளினாலே .................. மறுதலிக்கிறார்கள்
4. ஒருவனும் உன்னை..................இடங்கொடாதிருப்பாயாக
5. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள்.................. கூட இருப்பதாக

MONTHLY MAGAZINE
WORD OF CHRIST Regd No. 84661-92.

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கின்றோம்

ஞாயிறு காலை 9 00
புதன் மாலை 6-30.

கிறிஸ்துவின் சபை
கணவாய்ப்பட்டி ரோடு,
வத்தலக்குண்டு-624202.

PRINTED MATTER

TO,

If undelivered please ret rn to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624202.
S. India

Edited and publised by B. Arjunan M.A.,A.Bs , on behalf of church of Christ near water tank, Batlagundu
Printed by C. Pandiyarajan B.Sc. SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.